
# 18 திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம்



இலங்கையின் கிழக்குத் திசையில் அமைந்துள்ள இவ்வாலயம் திருகோணமலை நகரத்தின் இருதய ஸ்தானம் போல் அமைந்திருக்கின்றது. இவ் ஆலயத்திற்கெதிரே பரந்து விரிந்து கிடக்கும் இந்துசமுத்திரமும் இவ்வாலயத்தின் இயற்கை அழகை மெருகூட்டிக் கொண்டிருக்கின்றது.

ஈழநாட்டின் புண்ணிய ஸ்தலமாகிய திருக்கோணேஸ்வரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நின்றபடியே தரிசிக்கலாம். அம்பாளின் அருட்கடாட்சம் கோணேஸ்வரத்தில் படிய கோணேஸ்வரப் பெருமானின் அருட்கடாட்சம் அம்பாளுடைய ஆலயத்தில் நிறைந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு இவ்வாலயத்தில் நிற்கும் போது ஏற்படுகின்றது.




செப்பு கிடாரமும் புராதன அம்மனும்

சுமார் 400 ஆண்டுகட்கு முன்பு நடந்ததாகக் கூறப்படும் கர்ணபரம்பரைக் கதை ஒன்று ஸ்ரீபத்திரகாளி அம்பாளிடத்துப் பயபக்தியை ஸ்திரப்படுத்திக் கொண்டு இருக்கின்றது.

சிவ பூமியாம் திருகோணமலையில் தெய்வ விக்கிரகமொன்று இருக்கின்றது என மதுரைப் பிராமணன் ஒருவருக்கு தெய்வீக வாக்கு கிடைத்ததன் பேரில் அவர் திருகோணமலைக்கு

வருகை தந்து குறிப்பிட்ட இடத்தைத் தோண்டிய போது செப்புக் கிடாரமொன்றில் அழகுமயமான தெய்வீக அன்னையின் சிலையொன்று இருக்கக் கண்டு ஆச்சரியம் கொண்டார். அந்தப் பிராமணர் விக்கிரகம் இருந்த இடத்தில் பிரதிஷ்டை செய்தார். அதுவே இன்றைய ஆலயமாகும்.



பத்திரகாளி அம்பாள்

ஒருநாள் (யாவுகப்பெண்) ஒரு பெண் தலைவிரி கோலத்தோடு அம்பாளுடைய சந்நிதானத்திற்கு முன்பாக உதாசீனமாகச் சென்றாளாம். அதனால் அப்பெண்ணினுடைய தலை ஒரு பக்கம் திரும்பி விட்டதாம். அம்பாளுக்கு அபச்சாரம் செய்து விட்டதாக அப்பெண் கனவுகண்டு குற்றத்தையுணர்ந்து ஆலயத்திற்கு வந்து தனது தலைமயிரை கத்தரித்து நேர்த்திக் கடனாகக் கொடுத்த பின்பு தான் தலையினை சரியான நிலைக்கு திருப்பக் கூடியதாக இருந்ததாம்.



மஞ்சம்



கைலாசவாகனம்



சப்பறம்

பங்குனி உத்தரத்தை தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு பத்துநாட்கள் மகோற்சவம் நடைபெறுகின்றது. இங்கு மஞ்சம், கைலாச வாகனம்,சப்பரம் என்பன சிறப்பான திருவிழாக்களாகும். ஒன்பதாம் நாள் இரதோற்சவம் நடைபெற்று வருகின்றது. பங்குனி உத்தர தினத்தன்று

கோணேசப்பெருமான் எழுந்தருளியிருக்கும் சுவாமி மலையின் அடிவாரக் கடற்கரையில் காலையில் தீர்த்தமாடுவர்.

வைகாசிப் பௌர்ணமிக்கு முதல் வரும் திங்கட்கிழமை இவ்வாலயத்தில் பொங்கல்விழா நடைபெற்று வருகின்றது. இது ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதியில் நடைபெறும். அன்று மக்கள் வெள்ளம் கடல் வெள்ளத்தை மறைத்து நிற்கும் அற்புதக் காட்சியைக் காணலாம்.



**தேர்திருவிழா**

இவ்வாலயத்தில் இருந்த கட்டுத்தேருக்குப் பதிலாக 1972 ஆம் ஆண்டு சித்திரத்தேர் மூன்றும் மஞ்சமும் செய்யப்பட்டு இரதோற்சவத்திற்கு பயன்பட்டு வருகின்றது.

கிழக்கிழங்கையில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் இதுவாகும். 1981 ஆம் ஆண்டு இந்தத் தேர்களைப் பாதுகாப்பதற்காக பெரும் பணச்செலவில் தேராலயம் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது.



**முதலாம் இராஜேந்திர சோழனது கல்வெட்டு**

இவ்வாலயத்தின் வரலாற்றினைத் திட்ட வட்டமாக வரையறுத்துக் கூறமுடியவில்லை. என்றாலும் இவ்வாலத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் பழைய சாசனங்கள், கர்ண பரம்பரைக் கதைகள் என்பவற்றின் ஊடாக முதலாம் இராஜேந்திர சோழனுடைய காலமாகிய 11 ஆம் நூற்றாண்டில் இவ்வாலயம் சிறப்புற்று இருந்திருக்க வேண்டும் என்று சரித்திரப் பேராசிரியர் செ.குணசிங்கம் குறிப்பிடுகின்றார்.

பிரம்மஸ்ரீ சோமஸ்கந்தக்குருக்கள் இயற்கையெய்திய காரணத்தால் அவருடைய மகனாகிய சிவஸ்ரீ.சோ. ரவிச்சந்திரக்குருக்கள் ஆலயப் பொறுப்பினை ஏற்று சிறப்பாக நடாத்தி வருகின்றார்.

## பயிற்சிகள்

01. பத்திரகாளி அம்மன் ஆலயம் எங்கு அமைந்துள்ளது?

02. பத்திரகாளி அம்மன் ஆலயம் மகோற்சவம் எத்தனை நாட்கள் இடம்பெறுகின்றது?

03. இவ்வாலயத்தில் நின்றபடியே எவ்வாலயத்தை தரிசிக்கலாம்?

04. இவ்வாலயத்திற்கு எத்தனையாம் ஆண்டு தேராலயம் அமைக்கப்பட்டுள்ளது?

05. இவ்வாலய தீர்த்தம் யாது?

## செயற்பாடு

★ அம்பாளுடைய பல்வேறு திருவுருவங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தி அவ்திருவுருவங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

## பாடச்சுருக்கம்

✶ திருகோணமலை மாவட்டத்தின் இருதய ஸ்தானம் போல் இவ்வாலயம் அமைந்துள்ளது.

✶ கிழக்கிழங்கையில் அமைந்துள்ள சக்தி ஆலயங்களில் பத்திரகாளி அம்பாள் ஆலயம் குறிப்பிடத்தக்கது.

✶ திருக்கோணேஸ்வரத்தை இவ்வாலயத்தில் நின்றபடியே தரிசிக்கலாம்.

✶ இவ்வாலயத் தீர்த்தம் சுவாமி மலையின் அடிவாரத்திலுள்ள கடற்கரையாகும்.

✶ இவ்வாலயத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுகள், பழைய சாசனங்கள், கர்ணபரம்பரைக் கதைகள் ஊடாக இவ்வாலய வரலாற்றினை அறிந்து கொள்ளலாம்.